# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

**Part – II (3rd Year) Examination in Bachelor of Business Administration – 2009/2010**

**(Proper/Repeat) (August / September 2014)**

## EXB 303 Management Information System

**Answer all questions** **Time: 03 Hours**

---

**Q1.** பின்வரும் விடய கற்கையினை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

**E-bay தொடர்ந்தும் வளர்ச்சியடைய முடியுமா?**

E-bay வலைத்தளத்தை (WEB) அடிப்படையாகக் கொண்டு இயங்கும் ஒரு ஏலவிற்பனை வர்த்தகமாகும். E-bay எந்தப் பொருட்களையும் களஞ்சியப்படுத்தவோ, ஏற்றி இறக்கவோ இல்லை. மாறாக இணையத்தில் தகவல்களைப் பரிமாற்றுவதன் மூலம் வருமானத்தைப் பெற்றுக்கொள்கின்றது. இக்கம்பனி 2006ல் 200 மில்லியன்களுக்கும் மேலதிகமாக வாடிக்கையாளர்களைக் கொண்டு இயங்கிய இலாபகரமான கம்பனியாகும். E-bay ஆனது 8000 முழு நேர பணியாளர்களை கொண்டு 32 நாடுகளில் தொழிற்பட்டு வருகின்றது.

E-bay கம்பனியானது மிகப்பெரியளவில் கேள்வியைக் கொண்டுள்ளதுடன் அதன் தானியங்கி (Automatic) ஏலவிற்பனையானது விற்பனையாளர்களையும் கொள்வனவாளர்களையும் இணைக்க உதவியது. நுண்கலைப் பொருட்கள், நகைகள், ஆடைகள், இலத்திரனியல் பொருட்கள் போன்றவை பிரதான வகையில் பட்டியற்படுத்தப்பட்டு அதனுள் அதிகமான உபபிரிவுகளையும் கொண்டு காணப்படுகின்றது.

E-bay யின் வெற்றியானது அதன் தனித்தன்மையில் தங்கி உள்ளது. அதனது வருமானமானது பொருட்களைப் பரிமாற்றுவதன் மூலம் பெறப்படும் தரகுகள் மற்றும் கட்டணங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் இக்கம்பனியின் வருமானமானது இலட்சக்கணக்கான விற்பனையாளர்கள் தங்கள் பொருட்களை விற்பதற்காக நேரத்தையும் முயற்சியையும் ஈடுபடுத்துவதன் மூலம் கிடைக்கப்பெறுகின்றது. ஆனால் இவர்கள் இக்கம்பனியின் ஊழியர்கள் அல்ல. 0.5 மில்லியன் மக்கள் தங்கள் பிரதான வருமானமாக E-bay யின் ஏல விற்பனையையே நம்பி இருக்கின்றனர். விற்பனையாளர்கள் தங்கள் பொருட்களை E-bay யில் பட்டியற்படுத்த குறிப்பிட்டளவு கட்டணத்தை செலுத்துகின்றனர். மற்றுமொரு பகுதி வருமானமானது நேரடியான விளம்பரங்களை தங்களது இணையத்தளத்தில் செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

End-to-End சேவை வழங்குனர் E-Bay யின் பரிமாற்றங்களை வேகமாகவும் இலகுவாகவும் செய்ய உதவி புரிகின்றனர். Pay Pal கம்பனியை தன்னகப்படுத்தியதன் மூலம் பணப்பரிமாற்றங்களை இணையத்தினூடாக செய்வதை இலகுவாக்கியதுடன் மேலதிக வருமானங்களையும் பெற்றுக்கொள்ள வழி செய்தது. E-bay யின் வளர்ச்சித் தந்திரோபாயமானது புவியியல் ரீதியாக தன்னை விரிவுபடுத்திக்கொண்டு புதிய பொருட்களை அறிமுகப்படுத்தி பிரபல்யம் அடைவதனை மையமாகக் கொண்டுள்ளது. இம்மாதிரியானது இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் வெற்றியையும் கண்டுள்ளது. இணையத்தில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகத்தில் 50% ஆனவை E-bay வர்த்தகமாகவே காணப்பட்டது.

விற்பனையாளர்கள் தங்களது பொருட்களுக்கான விலைகளை தாங்களே தீர்மானித்து பட்டியற்படுத்தும் ஒரு புதிய முறையினை E-bay அறிமுகப்படுத்தியது. இதில் விற்பனையாளர்கள் ஏலவிற்பனைக்காக காத்திருக்கத் தேவையில்லை. மேலும் Halt.com நிறுவனத்தை தன்னகப்படுத்தியன் மூலம் ஏலவிற்பனை இல்லாமல் CD, Video மற்றும் Games போன்றவற்றை நபர்களுக்கிடையில் பரிமாற்றப்படுவதை இலகுபடுத்தியது.

மேலும் VOIP சேவை வழங்குனரின் Skype தொழில்நுட்பத்தை $2.6 பில்லியன் (Billion) செலுத்தி தன்னகப்படுத்தியது. இச்சேவையானது அழைப்புகளை குறைந்த அல்லது இலவசமாக இணையத்தளத்தினூடாக மேற்கொள்ள உதவியது. Google மற்றும் Yahoo போன்ற தளங்களும் தற்போது இச்சேவையை வழங்குவது குறிப்பிடத்தக்கது. இலத்திரனியல் வர்த்தகம் செய்யும் நிறுவனங்களுக்கு இச்சேவை மிகவும் முக்கியமானதொன்றாகும். ஆயினும் E-bay நிறுவனமானது இச்சேவையில் குரல் அழைப்பினை சேர்ப்பதில் ஆர்வம் காட்டவில்லை.

E-bay மற்றுமொரு சவாலையும் முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. Yahoo நிறுவனமானது ஆசிய சந்தையை போட்டித்தன்மையுள்ள ஏலவிற்பனையை முறையாக வடிவமைத்திருந்தது. E-bay சர்வதேச ரீதியாக வளர்ந்து வரும்போது பல்வேறு வகையான சட்டங்கள், நடைமுறைகளை கவனத்தில் கொள்ள வேண்டிய சிக்கல் ஏற்பட்டது.

தடை செய்யப்பட்ட சில பொருட்களை பட்டியல்படுத்த E-bay தடை விதித்த போதும் சில விற்பனையாளர்கள் அதனைத் தந்திரமாக இன்றும் பட்டியற்படுத்தி வருகின்றனர். அவ்வாறான செயல்களுக்கு E-bayயே பொறுப்பாளியாக இருந்து வருகின்றது. மேலும் போட்டித்தன்மையை எதிர்கொள்ளும் வகையில் E-bay Yahoo மற்றும் Google நிறுவனங்களுடன் தனது உறவினை வலுப்படுத்தி வருகின்றது. ஆயினும் Google நிறுவனமானது E-bay க்குப் போட்டியாக தனது பொருட்களை விற்பனை செய்வதை அறிமுகப்படுத்தி உள்ளது. இதற்குப் பதிலாக Google நிறுவனத்துடன்

போட்டியை வலுப்படுத்த adcontext சேவையை E-bay அறிமுகப்படுத்தியது.

E-bay தனது சேவையை நேர்மையாக நடாத்த முயன்றும் சில விற்பனையாளர்களின் நடவடிக்கைகளான, அரிய பொருட்களை விற்பனை செய்தல், அதிக விலைக்கு விற்பனை செய்தல் போன்ற விடயங்கள் அதனது நன்மதிப்பைப் பாதிப்பதாகக் காணப்பட்டது. E-bay யினால் அதிகாரமளிக்கப்படாத கணக்கு மூலம் மேற்கொள்ளப்படும் பரிமாற்றங்கள் மூலமாக அநேக வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஆயினும் E-bayயின் நிலைத்து நிற்றலானது தொழில்நுட்பத்தை விரிவுபடுத்தி மேற்குறிப்பிட்ட மோசடி நிலைமைகளை நிறுத்துவதிலேயே தங்கியுள்ளதே தவிர நிறுவனங்களை தன்னகப்படுத்துவதில் அல்ல என்பதை விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

வினாக்கள்

i) E-bayயின் வணிக மாதிரி மற்றும் வியாபார தந்திரோபாயத்தை பட்டியலிடுக. இத்தந்திரோபாயமானது E-bayக்கு எந்தளவிற்கு வெற்றியினை அளித்துள்ளது என சுருக்கமாக எடுத்துரைக்குக.

**(Total 06 Marks)**

ii) E-bayயானது தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளை சுருக்கமாக விளக்குக.

**(Total 06 Marks)**

iii) E-bayயானது அப்பிரச்சினைகளை தீர்க்க கையாளும் வழிகளானது சிறப்பானதா? ஆராய்க.

**(Total 08 Marks)**

iv) E-bayயானது தொடர்ந்தும் போட்டிச்சூழலில் நிலைத்துநிற்க எவ்வகையான தந்திரோபாயங்களை கையாள வேண்டும் என விளக்குக.

**(Total 08 Marks)**

**(Total 28 Marks)**

**Q2.** i) தகவல் தொழில்நுட்பம் என்றால் என்ன என குறிப்பிட்டு உற்பத்தித்திறனை முன்னேற்ற தகவல் தொழில்நுட்பமானது எவ்வாறு உதவுகின்றது என உதாரணங்களுடன் விளக்குக.

**(06 Marks)**

ii) தகவல்தொழில்நுட்பமானது உற்பத்தித்திறனை முன்னேற்றும் சந்தர்ப்பத்தில் தோற்றுவிக்கும் எதிர்மறையான விளைவுகளை விளக்குக.

**(06 Marks)**

iii) "தகவலின் பண்புகளின் அடிப்படையில்த்தான் தகவலின் பெறுமதியானது கண்டு கொள்ளப்படுகின்றது". ஒரு நல்ல தகவலில் காணப்படக்கூடிய பண்புகள் நான்கினை (04) சுருக்கமாக விளக்குக.

**(06 Marks)**

**(Total 18 Marks)**

**Q3.** i) "முறைமை என்பது ஒரு பொதுவான நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு ஒன்றாகத் தொழிற்படும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஒரு தொகுதி எனலாம்". ஒரு நிறுவனத்தின் முறைமையினை (System) விளக்கப்படத்தின் உதவியுடன் சுருக்கமாக விளக்குக.

**(06 Marks)**

ii) "பரிமாற்ற முறைவழியாக்கல் முறைமையானது (Transaction Processing System) நிறுவனங்களின் நாளாந்த தொழிற்பாடுகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றனவாகும்". பரிமாற்ற வழிமுறையாக்கல் எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

**(06 Marks)**

iii) "தீர்மான ஆதரவு முறைமையானது (Decision Support System) பல்வேறு கூறுகளைக் கொண்டு காணப்படுகின்றது". தீர்மான ஆதரவு முறைமையின் கூறுகளை சுருக்கமாக விளக்குக.

**(06 Marks)**

**(Total 18 Marks)**

**Q4.** i) நிறைவேற்றுத் தகவல் செயன்முறையானது (Executive Information System) எவ்வாறு செயற்படுகின்றது என வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

**(06 Marks)**

ii) "தீர்மான ஆதரவு முறைமையினைப் பயன்படுத்தும் போது அது நான்கு வகையான பகுப்பாய்வு மாதிரியாக்கல் செயற்பாடுகளுடன் தொடர்புபடுகின்றது". அவ்வாறான மாதிரிகளினை சுருக்கமாக விளக்குக.

**(06 Marks)**

**iii)** “ஒரு தொழில் நிறுவனத்தின் தொழிற்பாடுகளான நிதி, சந்தைப்படுத்தல், உற்பத்தி, மனித வள முகாமைத்துவம் போன்றவை ஒரு நிறுவனத்தின் தொழிற்பாட்டுப் பகுதிகளில் காணப்படும் தகவல் முறைமைப் பிரயோகங்களாகும்”. அவ்வாறான ஏதேனும் ஒரு தகவல் முறைமையினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

**(06 Marks)**

**(Total 18 Marks)**

**Q5.** **i)** “ஒரு கைத்தொழிலில் தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கத்தினை ஆய்வு செய்வதற்கு Porter உடைய ஐந்து சக்திகள் மாதிரியினை பயன்படுத்த முடியும்”. Porter உடைய ஐந்து சக்திகள் மாதிரியினை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக.

**(06 Marks)**

**ii)** “ஒரு நிறுவனம் ஐந்து போட்டிக்குரிய சக்திகளினை எதிர் கொள்வதற்கு வசதியாக பலவகையான போட்டி அடிப்படையிலான தந்திரோபாயங்களினை உருவாக்கலாம்”. அவ்வாறான போட்டிக்குரிய தந்திரோபாயங்கள் நான்கினை (04) சுருக்கமாக விளக்குக.

**(06 Marks)**

**iii)** ஒரு நிறுவனத்திற்கான நான்கு (04) தகவல் முறைமைப் பிரயோகங்களை சுருக்கமாக விளக்குக.

**(06 Marks)**

**(Total 18 Marks)**